**இயற்கை விவசாயம்**



பசிக்கு உணவளிக்கும் விவசாயம், இப்போது வியாபாரீதியில் எடுத்துச் செல்லப்படுகிறது. இயற்கை விவசாயியும், பாரம்பரியம் நெல் விதை சேமிப்பாளாரும் ஆன திரு.எம்.ஜி.எஸ்.சங்கர் திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்தவர். இவர் கூறுவதுதாவது வியாபார மையம் ஆக்கப்பட்ட பின் குறிப்பிட்ட இடத்திற்குரிய பாரம்பரிய விதைகள் மற்றும் செடிகள் அழிந்தன என்பதாகும்.அதிக பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில், பல விவசாயிகள், நவீன தொழில்நுட்பங்கள் மற்றும் வீரிய ஒட்டு பயிர் இரகங்களை உபயோகின்றனர். வீரிய ஒட்டு விதைகளை பல நிறுவனங்களே விநியோகிக்கிறது. கூடுதலாக இவற்றிக்கான உரம், பூச்சிகொல்லி மருந்துகளையும் அவைகளே விற்பனை செய்கின்றனர்.

வெளிபுற சார்ப்பு (External Dependency)நிறுவனங்களின் வீரிய ஒட்டு விதை விநியோகம் காரணமாக விவசாயிகள் வெளிபுர காரணிகளான விதை, உரம், இயந்திரம் மற்றும் வேயைாட்கள் ஆகியவையை சார்ந்து இருந்தனர். இதன் விளைவாக பயிர் வளர்ச்சி தடைப்பட்டு, விவசாயிகள் கடனாளிகள் ஆகும் நிலைமைக்கு வந்தனர். மேலும் சிலர் தற்கொலை முயற்சியிலும் இடப்பட்டனர்.திரு.சங்கர், தனது விளைநிலத்தில் பாரம்பரிய நெல் வகைகளான அரிகாராபி (Arikaraabi), கொட்டாரம் சம்பா (Kotaram samba), தூய மல்லி (Thooya malli) ஆகியவையை சாகுபடி செய்கிறார். இவற்றில் அரிகாராபி மற்றும் கோட்டாரம் சம்பா பயிர்களை 150 நாட்களிலும் தூய மல்லி இரகம் - 120 நாட்களிலும் சாகுபடி செய்யலாம். இவை மூன்று இரகங்களும் திருநெல்வேலி மாவட்டத்தில் அக்டோபர் முதல் நவம்பர் மாதம் வரை மட்டும் பயிரிடலாம். திரு. சங்கர் இயற்கை வேளாண் இடுபொருட்களான மண்புழு உரம், பஞ்சகாவியா மற்றும் இலை சாறு போன்றவற்றை நெல் சாகுபடிக்கு உபயோகப்படுத்தினார். மேலும் இவர், செம்மை நெல் சாகுபடி முறையும் கடைப்பிடிக்கிறார்.

### Preserve & Protect:

திரு.சங்கர் வலியுறுத்துவது யாதெனில் “வீரிய ஒட்டு இரகங்கள் அதிக மகசூல் தரும் ஆயினும், பாரம்பரிய விதை வகைகளை பாதுகாக்கும் பொறுப்பு விவசாயிகளக்குரியதும்”. பாரம்பரிய விதைகளை பாதுகாத்தல் என்பது ஒவ்வொரு விவசாயின் செயல்திட்டமாகும். ஒருவரின் சுயமரியாதை எவ்வளவு முக்கியமானதோ, அது போன்று தாவரவளம் மற்றும் விலங்குகளின் பாதுகாப்பு இன்றியமையாதது. அனைத்து நிபந்தனைகளிலும் வீரிய ஒட்டு இரகங்கள் செழிந்து வளர்வதில்லை. ஏனெனில், அப்பகுதியை சார்ந்த இரகங்களைகாட்டிலும். அதிக கவனமும் எச்சரிக்கையும் இவ்வீரிய ஒட்டு இரகங்களுக்கு தேவை. மேலும் பூச்சி தாக்குதல் பாரம்பரிய விதைகளை் காட்டிலும் அதிகமாக இருக்கும் / காணப்படும்.வீரிய இரக விதைகளை பாரம்பரிய இரகத்துடன் ஒப்பிடுகையில் வீரிய இரகத்தின் விலை அதிகம் என்பது புலப்படும். ஒரு ஏக்கர் நிலத்தில், நெல் சாகுபடி செய்ய, இரு பொருட்களான வீரியவிதை, உரம் மற்றும் வேலை ஆட்கள்

என்று கிட்டத்தட்ட 5,000 ரூபாய் தேவைப்படுகிறது. வரை ஒரு சிறுவிவசாயி செலவிட நேர்கிறது.ஆனால் சில பாரம்பரிய விதைகளை, சேமித்து அவற்றை கொண்டு இயற்கை முறையில் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு ரூபாய் 500 முதல் 700 வரை மட்டுமே செலவாகும். மேலும் முக்கியமாக, பயிர் சாகுபடி செய்தபின், அதில் ஒரு பகுதியை சுத்தம் செய்து, அடுத்த பருவகாலத்திற்கு பாதுகாத்து வைக்கலாம், இவ்வகை வீரிய இரக விதைகளுக்கு பயன்படாது.இன்றைய காலகட்டத்தில் ஒரு தெளிவான குறிக்கப்பட்ட விலை விபரம், பாரம்பரிய விதைகளுக்கு இல்லை. ஒரு கிலோ நெல் விதை 10 ரூபாய்க்கு விற்றால் கூட அதில் லாபம் பெற முடிகிறது.

Sustainable technology:பயிர் உற்பத்தி, ஆய்வுக்கூடத்திலோ, உர உபயோகத்தினாலோ இல்லாமல், இயற்கை விவசாய முறையில் சாகுபடி செய்வதன் மூலம், நிலத்திற்கு எவ்வகை தீங்கும் விளைவிக்காமல் நல்ல மகசூல் பெற வழிவகுக்கும். இவ்வுண்மையை அறிந்துக்கொள்ள விவசாயிகளுக்கு நீணட் காலமானது என்று திரு.சங்கர் கூறுகிறார்.ஒரு நாட்டின் உணவு உற்பத்தி, வெற்றிபெற, இயற்கையோடு ஒன்றிய விவசாய முறையை கடைப்பிடிக்க் வேண்டும் என்று கொள்கைதாரர்கள் உணர வேண்டும். ஏனெனில் வேளாண்மை என்பது மனிதனக்கும் இயற்கைக்கும் ஆன இடைத்தாக்கம்.

தொடர்புக்கு:
திரு.எம்.ஜி.எஸ்.சங்கர்,
9, வலம்புரி அம்மன் கோவில் வீதி,
திருநெல்வேலி - 627 006 தமிழ்நாடு
மின் அஞ்சல் முகவரி : nelkan39@yahoo.co.in
அலைபேசி : 94433-39824